بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 04/03/2022 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

## ஹஸ்ரத் அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களைப் பற்றிய நற்குறிப்பு - தொடர் 12

☆ ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை பின்பற்றியதன் காரணமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எந்த அளவு அந்தஸ்து கிடைத்துள்ளது என்றால், இன்று முழு உலகமும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் அன்னாருடைய பெயரை உச்சரிக்கின்றது

☆ கவலையைத் தூண்டும் உலகின் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டவாறு அதிகமாக ஸலவாத் ஓதுமாறும், இஸ்திக்ஃபார் செய்யுமாறும், சில துஆக்களை செய்யுமாறும் அறிவுறுத்தல்

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۱ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ۝۲ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ۝۳ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ۝۴ اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ۝۵

اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ۝۶ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ۝۷

முதல் (கலீஃபயே ராஷித்) நேர்வழி பெற்ற கலீஃபாவை தேர்ந்தெடுக்கும் சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் ஹப்பாப் பின் முன்ஸிர் (ரலி) அவர்கள் கூறிய ஆலோசனை தபரி வரலாற்று நூலில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. 'குரைஷிய முஹாஜிர்கள், அன்சாரின் கீழ் இருக்கிறார்கள். ஆகவே இவ்விவகாரத்தில், ஓர் அமீர் அன்சாரிலிருந்து இருப்பார்; ஓர் அமீர் முஹாஜிர்களிலிருந்து இருப்பார் என்ற அன்சாரின் தீர்ப்பை ஒப்புக்கொள்ள வேண்டும்' என அவர்கள் கூறியிருந்தார்கள். ஆனால் பஷீர் பின் சஃது (ரலி) அவர்களின் ஆலோசனை என்னவாக இருந்ததென்றால், 'ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் குரைஷிய சமுதாயம் தலைமைத்துவத்திற்கு அதிக உரிமை பெற்றதும் தகுதியுடையதும் ஆகும்.' சுனன் குப்ரா லின் நஸாயியில் இவ்வாறு வருகிறது. அச்சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், ஓர் உறையில் இரு வாள்கள் இருக்க முடியாது என்று கூறியவாறு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கைகளைப் பிடித்துக் கொண்டு மூன்று சிறப்புகளை எடுத்துரைத்தார்கள்: اِذۡ ہُمَا فِی الۡغَارِ اِذۡ یَقُوۡلُ لِصَاحِبِہٖ لَا تَحۡزَنۡ اِنَّ اللّٰہَ مَعَنَا "அவ்விருவரும் குகையில் இருந்தபோது அவர் தம் தோழரிடம், கவலைப்படாதீர்! நிச்சயமாக அல்லாஹ் நம்முடன் இருக்கின்றான் என்று கூறினார்." அப்போது குகையில் இருந்த இருவர் யார்? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடன் இருந்தவர் யார்? ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் யாருடன் இருந்தார்கள்? என்று கூறிவிட்டு ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்த போது முழு சமுதாயமும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தது. இது பைஅத்தே ஸகீஃபா என்றும் பைஅத்தே காஸ்ஸா என்றும் பிரசித்திப் பெற்றுள்ளது.

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:- பைஅத்திற்கு அடுத்த நாள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் சொற்பொழிவாற்றியவாறு கூறினார்கள்:

“மக்களே! ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மரணமடையவில்லை என்று நான் கூறினேன். (அதற்கான காரணமென்னவென்றால்,) அதைப் பற்றிய குறிப்பை நான் அல்லாஹ்வின் வேதத்தில் காணவில்லை. அத்துடன், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களும் அதைக் குறித்து என்னிடம் வஸிய்யத் செய்திருக்கவுமில்லை. நாம் முதலில் இறப்போம்; ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் நம்மில் இறுதியானவராக இருப்பார்கள் என நான் நினைத்திருந்தேன்.

ஆனால், அல்லாஹ் உங்களுடைய விவகாரங்களை எவ்வாறான ஒரு மனிதரின் கைகளில் கொடுத்து விட்டான் என்றால், அவர் உங்கள் அனைவரையும் விட சிறந்தவராவார். அவர், ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் தோழர் ஆவார். ثَانِيَ اثْنَيْنِ اِذْ هُمَا فِي الْغَارِ குகையில் இருந்த இருவரில் ஒருவராவார். ஆகவே, எழுங்கள்! அவரிடம் பைஅத் செய்யுங்கள்! என்று கூறினார்கள். எனவே, மக்கள் பைஅத்தே ஸகீஃபாவுக்குப் பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தார்கள்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் பொது பைஅத் தினத்தில் ஒரு குத்பா கொடுத்தார்கள். மக்களே! நிச்சயமாக நான் உங்களின் மீது கண்காணிப்பாளனாக நியமிக்கப்பட்டுள்ளேன். ஆனால் நான் உங்கள் அனைவரையும் விட சிறந்தவன் அல்லன். நான் நல்ல பணியை செய்தால் நீங்கள் எனக்கு ஒத்துழைப்பு வழங்குங்கள். நான் கோணல் தன்மையை மேற்கொண்டால் நீங்கள் என்னை நேராக்குங்கள். அல்லாஹ் மற்றும் அவனது தூதர் (ஸல்) ஆகியோருக்கு நான் கட்டுப்பட்டால் நீங்கள் எனக்குக் கட்டுப்படுங்கள். நான் மாறு செய்தால், எனக்குக் கட்டுப்படுவது உங்கள் மீது கட்டாயமல்ல என்று கூறினார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்தது குறித்து பல்வேறு அறிவிப்புகள் காணக் கிடைக்கின்றன. அல்லாமா இப்னு கஸீர் அவர்கள் கூறுகிறார்கள்: ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் மரணமடைந்த பிறகு முதல் நாளிலோ அல்லது இரண்டாவது நாளிலோ பைஅத் செய்து விட்டார்கள். ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஒருபோதும் விட்டு விடவுமில்லை; அன்னாருக்குப் பின்னால் நின்று தொழுவதை அவர்கள் கை விடவுமில்லை.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் ஆரம்பத்தில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களிடம் பைஅத் செய்யவும் காலதாமதம் செய்தார்கள். ஆனால் ஒரு முறை என்னவாயிற்று என்று தெரியவில்லை, இறைவனே அறிவான்! தலைப்பாகை கூட அணியாமல் உடனே தொப்பி அணிந்து கொண்டு பைஅத் செய்வதற்கு வந்து விட்டார்கள். பிறகு தலைப்பாகையை வரவழைத்தார்கள். இது பெரும் பாவம் என்ற சிந்தனை அவர்களுடைய உள்ளத்தில் தோன்றியிருக்கலாம். ஆகவேதான் விரைந்து வந்து விட்டார்கள்.

**ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்காவின் ஒரு சாதாரண வியாபாரியாக இருந்தார்கள். ஆனால், ஹஸ்ரத் முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களை பின்பற்றியதன் காரணமாக அன்னாருக்கு எந்த அளவு அந்தஸ்து கிடைத்துள்ளது என்றால், இன்று முழு உலகமும் மரியாதை மற்றும் கண்ணியத்துடன் அன்னாருடைய பெயரை உச்சரிக்கின்றது. அன்னாருடைய தந்தையிடம் ஒருவர் சென்று, வாழ்த்துகள்! அபூபக்ர் கலீஃபாவாக ஆகி விட்டார் என்று கூறிய போது, முதலில் அவருக்கு நம்பிக்கை

வரவில்லை. ஆனால் அவருக்கு நம்பிக்கையூட்டப்பட்டபோது அல்லாஹு அக்பர்! என்று கூறியவாறு, அபூகஹாஃபாவின் மகனை அரேபியர்கள் தம் தலைவராக ஏற்றுக்கொள்ளும் அளவுக்கு முஹம்மது (ஸல்) அவர்களின் மகத்துவமும் எத்துனை உயர்ந்ததாக உள்ளது! என்று கூறினார்கள்.

**ஹஸ்ரத் முதலாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:** அல்லாஹ் எவருடைய உபகாரத்தையும் தம்மீது வைத்துக் கொள்வதில்லை என்பதை உறுதியாகப் புரிந்து கொள்ளுங்கள்! ஒருவர் இறைவனுக்காக எந்த அளவுக்கு கொடுக்கிறாரோ அதைவிட ஆயிரம் மடங்கு, இலட்சம் மடங்கு அதிகமாக இறைவன் அவருக்குக் கொடுத்து விடுகின்றான். அபூபக்ர் (ரலி) அவர்கள் மக்காவில் ஒரு சாதாரண வீட்டைத் துறந்தார்கள். ஆனால், இறைவன் அதற்குப் பகரமாக அவரை ஓர் அரசாங்கத்திற்கு எஜமானராக ஆக்கி விட்டான்.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் ஒரு முறை கனவில், தம் உடலில் ஏமன் தேசத்தின் இரு போர்வைகள் இருப்பதைக் கண்டார்கள். ஆனால் அதன் முன் பகுதியில் இரு கறைகள் இருந்தன. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் இந்தக் கனவைக் குறித்து கூறும்போது, ஏமன் உடை என்பது, உங்களுக்கு நல்ல சந்ததி கிடைக்கும் என்பதாகும். இரண்டு கறைகள் என்பது இரு வருட தலைமைத்துவம் ஆகும். அதாவது நீங்கள் இரு வருடம் முஸ்லிம்களுக்கு ஆளுநராக இருப்பீர்கள் என்றார்கள்.

கிலாஃபத்திற்காக தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் சொந்த செலவுக்காக வருடத்திற்கு ஆறாயிரம் திர்ஹம்கள் உதவித் தொகை ஒப்புதல் செய்யப்பட்டது. ஆனால், ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் மரண வேளை நெருங்கியபோது அவர்கள் தம் உறவினர்களிடம், நான் பைத்துல் மாலிடமிருந்து வாங்கிய உதவித் தொகை அனைத்தையும் திருப்பிக் கொடுத்துவிட வேண்டும். அதை செலுத்துவதற்காக என்னுடைய இன்னின்ன நிலங்களை விற்று விடுங்கள் என கட்டளையிட்டார்கள். ஆகவே ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் கலீஃபாவாக ஆன போது அந்தத் தொகை அன்னாரிடம் வந்தடைந்த போது, அவர்கள் அழுதார்கள். அபூபக்ர் சித்தீக் (ரலி) அவர்களே! நீங்கள் உங்கள் வாரிசுகள் மீது மிகப்பெரும் சுமையைப் போட்டு விட்டீர்கள் என்று கூறினார்கள்.

நேர்வழி பெற்ற நான்கு கலீஃபாக்களில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் இரண்டே கால் வருட குறுகிய கிலாஃபத் கால கட்டம், ஒரு பொன்னான கால கட்டம் என்று கூற தகுதியுடையதாக இருந்தது. ஏனென்றால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அனைவரையும் விட அதிக ஆபத்துகளையும், சோதனைகளையும் எதிர்கொள்ள நேர்ந்தது. ஆனால் இறைவனுடைய அசாதாரண உதவி ஒத்தாசைகளின் அருளால் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் முழுமையான வீரம், துணிவு, அறிவு மற்றும் அகப்பார்வை ஆகியவைகளின் காரணமாக குறுகிய காலத்திலேயே, அச்சுறுத்திய அபாயகரமான அனைத்து மேகங்களும் விலகி விட்டன. மேலும் அனைத்து அச்சங்களும் அமைதியாக மாறி விட்டிருந்தன.

ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு, கிலாஃபத்தின் ஆரம்ப கால கட்டத்திலேயே ஐந்து விதமான துன்பங்களையும் இன்னல்களையும் எதிர்கொள்ள நேர்ந்தது. 1. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் மரணம் மற்றும் பிரிவின் துன்பம். 2. கிலாஃபத் தேர்தல் மற்றும் சமுதாயத்தில் குழப்பம், கருத்து வேறுபாடு ஆகியவற்றின் அச்சமும் அபாயமும். 3. உஸாமா அவர்களின் படை புறப்படுதல் குறித்த விவகாரம். 4. முஸ்லிம்கள் என்றழைக்கப்பட்டோர் ஸ(க்)காத் கொடுக்க மறுத்து மதீனாவின் மீது தாக்குதல் தொடுத்தது. இதை வரலாற்றில் ஸ(க்)காத்

கொடுக்க மறுத்தோரின் குழப்பம் என்று கூறப்படுகின்றது. 5. முர்தத்துகளின் குழப்பம். அதாவது, கட்டுப்படாதோர் மற்றும் கலகம் செய்வோர் பகிரங்கமாக கிளர்ச்சி செய்து போருக்கு அறிவித்து விட்டார்கள். எவர்கள் சுயமாக தன்னை நபி என்று வாதித்துக் கொண்டிருந்தார்களோ அவர்களும் இந்த கிளர்ச்சியில் இணைந்து விட்டார்கள். அச்சத்தின் இந்த அனைத்து நிலைகளிலும், சோதனைகளையும் குழப்பங்களையும் அழித்தொழிப்பதில் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு அல்லாஹ் வெற்றியை வழங்கினான்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் முதல் கலீஃபாவான ஹஸ்ரத் யூஷஃ பின் நூன் அவர்களுடன் ஒப்புமை செய்தவாறு, ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கு எதிர்கொள்ள நேர்ந்த விவகாரங்கள், சோதனைகள் குறித்தும் வெற்றிகள், முன்னேற்றங்கள் குறித்தும் எடுத்துரைத்தவாறு கூறுகிறார்கள்:**

وَعَدَ اللّٰهُ الَّذِيْنَ اٰمَنُوْا مِنْكُمْ وَعَمِلُوا الصّٰلِحٰتِ لَيَسْتَخْلِفَنَّهُمْ فِى الْاَرْضِ كَمَا اسْتَخْلَفَ الَّذِيْنَ مِنْ قَبْلِهِمْ எனும் வசனத்திலிருந்து மூஸவிய்ய கிலாஃபத் தொடருக்கும் முஹம்மதிய கிலாஃபத் தொடருக்குமுள்ள ஒப்புமை நிரூபணமாகிறது. ஒப்புமைக்கான முதல் அடிக்கல்லை எடுத்து வைத்தவர் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆவார்கள். ஒப்புமையின் இறுதி முன்னுதாரணத்தை வெளிப்படுத்தக் கூடிய காத்தமுல் குலஃபா மஸீஹ் ஆவார். அதாவது, முஹம்மதிய கிலாஃபத் தொடரின் கடைசி கலீஃபா ஆவார். யஷூஃ பின் நூன் மற்றும் ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) ஆகியோரின் ஒப்புமையை இரண்டு கிலாஃபத்களின் ஆரம்ப தொடராகவும், ஹஸ்ரத் ஈஸா பின் மர்யம் மற்றும் இந்த உம்மத்தின் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் ஆகியோரின் ஒப்புமையை இரண்டு கிலாஃபத்களின் கடைசி தொடராகவும் இறைவன் ஆக்கி, அதை பிரகாசமானதாகவும் தெளிவானதாகவும் காட்டி விட்டான். ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களின் மரணத்திற்குப் பிறகு பனீ இஸ்ராயீல் யூஷஃ பின் நூன் அவர்களின் பேச்சுக்குக் கட்டுப்பட்டு அனைவரும் தம் கட்டுப்படுதலை வெளிப்படுத்தியது போன்றே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் நிகழ்ந்தது. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் பிரிவால் அனைவரும் கண்ணீர் வடித்து, உளப்பூர்வமாக ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களின் கிலாஃபத்தை ஏற்றுக் கொண்டு விட்டனர்.

**கிலாஃபத் தொடர்பான வசனம் குறித்து ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** நம்பிக்கை கொண்டு நற்செயலாற்றுபவர்களிடம், ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்குப் பிறகு ஏற்படுத்தப்பட்ட கிலாஃபத் தொடரைப் போன்று கிலாஃபத் தொடர் ஏற்படுத்துவதாகவும், இஸ்லாமிய மார்க்கத்தை பூமியில் உறுதிப்படுத்துவதாகவும் அதன் வேர்களை உறுதியாக்குவதாகவும், அச்ச நிலையை அமைதியின் நிலையைக் கொண்டு மாற்றுவதாகவும் இறைவன் வாக்குறுதி அளித்துள்ளான். இந்த வசனத்தில் இறைவன் தெளிவாகக் கூறிவிட்டான். அதாவது, அச்சத்தின் காலமும் வரும்; அமைதி சென்று கொண்டிருக்கும். ஆனால் இறைவன் இந்த அச்சத்திற்குரிய காலத்தை அமைதியின் காலத்தைக் கொண்டு மாற்றி விடுவான். ஆகவே, இதே அச்சம்தான் யஷூஃ பின் நூன் அவர்களுக்கும் வந்தது. அவருக்கு இறை வார்த்தைகளின் மூலமாக ஆறுதல் அளிக்கப்பட்டது போன்றே ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுக்கும் இறை வேதத்தின் மூலமாக ஆறுதல் அளிக்கப்பட்டது.

*ஹுஸூர் அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் உலகின் தற்போதைய பயங்கரமான சூழ்நிலைகளுக்காக துஆவுக்காக அறிவித்தவாறு கூறினார்கள்:*

**தற்போது அணு ஆயுத போர் குறித்தும் மிரட்டல்கள் விடுக்கப்படுகின்றன. இதன் விளைவுகளை வருங்கால தலைமுறையினர் கூட அனுபவிக்க நேரும் என்பதைக் குறித்து இதற்கு முன்பும் நான் பல முறை கூறியுள்ளேன். அல்லாஹ்தான் இம்மக்களுக்கு அறிவை வழங்க வேண்டும். இந்நாட்களில் ஸலவாத்தும் அதிகம் ஓதுங்கள்; அதிகமாக இஸ்திக்ஃபாரும் செய்யுங்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஒரு சமயத்தில் ஜமாஅத்திற்கு குறிப்பாக வலியுறுத்தியவாறு கூறும்போது, ருகூஃவுக்குப் பிறகு நிற்கும் நிலையில்**

رَبَّنَآ اٰتِنَا فِی الدُّنْیَا حَسَنَةً وَّفِی الْاٰخِرَةِ حَسَنَةً وَّقِنَا عَذَابَ النَّارِ

**எனும் துஆவை செய்யுமாறு கூறினார்கள். ஆக, இந்த துஆவையும் இந்நாட்களில் அதிகமாக ஓத வேண்டிய தேவை உள்ளது. அல்லாஹ் நன்மைகளையும் வழங்குவானாக! எல்லாவித நெருப்பின் தண்டனையிலிருந்தும் அனைவரையும் காப்பாற்றுவானாக! (ஆமீன்)**

*குத்பாவின் இறுதியில் ஹுஸூர் அவர்கள், சிரியாவைச் சார்ந்த மதிப்பிற்குரிய அபுல் ஃபரஜ் அல் ஹுஸ்னி ஸாஹிப் அவர்களது மரணச் செய்தியை அறிவித்து அவர்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு அவர்களின் ஜமாஅத் தொண்டுகளைக் குறித்தும் எடுத்துக் கூறினார்கள். ஜுமுஆ தொழுகைக்குப் பிறகு அவர்களின் ஜனாஸா காயிப் தொழுகையை தொழுவதற்கான அறிவிப்பையும் செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِىَ لَهٗ وَنَشْهَدُ أَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللهُ وَنَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ الله رحمكم الله اِنَّ اللهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِى الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ وَلَذِكْرُ اللهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**